# நீதிமற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

## சிறைச்சாலைத் திணைக்களத்தின் உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர்/ உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் (புனர்வாழ்வு) அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை–2025

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் / உதவி சிறைச்சாலை அத்தியட்சகர் (புனர்வாழ்வு) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய,அந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 2026 யூன் மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென்பது இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளமான www.donets.lkஇல் “Our Services”என்பதன் கீழுள்ள“Online Applications – Recruitment Exams/E.B.Exams”என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளதோடுவிண்ணப்பங்களை நிகழ்நிலையில் (Online) மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல்2026மார்ச் மாதம்10 ஆம் திகதிமு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதோடு2026 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிபி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.விண்ணப்ப படிவத்தை நிகழ்நிலையில் அனுப்பியதன் பின்னர் அதனைப் பதிவிறக்கம் செய்து அச்சுப்பிரதியில் உரிய பகுதியை கையினால் நிரப்பி விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தி, உரிய நிறுவனத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தல் சகிதம் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குக் கிடைக்க கூடியதாகப்பதிவு அஞ்ஞலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் இறுதித் தினம் வரை தாமதிப்பதால் ஏற்படுகின்ற எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

02. இலங்கை நிர்வாக சேவையின் மற்றும் கணக்காளர் சேவையின், உள்ளூராட்சி சேவையின் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படுகின்ற வினைத்திறன் காண் பரீட்சைக்கு உரிய பரீட்சைக்குஉதவி அத்தியட்சகர்கள் தோற்றுதல் வேண்டும். இந்தப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் D8/21/90/சி.ஆ/உதவி அத்தியட்சகர்கள் மற்றும் 2006/01/17 ஆம் திகதிய ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ளதோடு விண்ணப்பதாரர்களின் வசதிக்காக பரீட்சை நடைமுறை (அட்டவணை 01) மற்றும் பாடத்திட்டம் (அட்டவணை 02) கீழே தரப்பட்டுள்ளது

(அ) (அட்டவணை 01) - பரீட்சை நடைமுறை

| பாட இல | பாடம் | காலம் (மணித்தியாலம்) | மொத்தப் புள்ளி | சித்தியடைவதற்குதேவையான ஆகக் குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 01. | சட்டம் I | 03 | 100 | 40% |
| 02. | கணக்கு முறைகள் | 03 | 100 | 40% |
| 03. | நிர்வாகம் விடயம் | 03 | 100 | 40% |

(ஆ) (அட்டவணை 02 ) - பாடத்திட்டம்.

| பாட இல | பாடம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01. | சட்டம் I | i. சாட்சிகள் கட்டளைச் சட்டம்<br>ii. குற்றவியல் வழக்கு கட்டளைக் கோவையின் I,IV,V,VI,VIII,X,XII,XIV,XV,XVI,XVIII,XX,XXIV,XXV,XXVI,XXVII,XXX,XXXI மற்றும் XXXIV ஆம் அத்தியாயங்கள் |
| 02. | கணக்கு முறைகள் | நிதி ஒழுங்கு விதி 01,02,03,04,05 மற்றும் 08 ஆம் அத்தியாயங்களிலிருந்து வினாக்கள் |
| 03 | நிர்வாகவிடயம் | தாபன விதிக்கோவையின் அத்தியாயம்I,II,Vஇற்குப் பதிலாக நடைமுறை விதிக்கோவையின் உரிய அத்தியாயங்கள் மற்றும் தாபன விதிக் கோவையின்VI, VII,IX,XXIII,XXV,XXVI,XXVIII, XXIX,XXX,XXXI,XXXII,XXXIII,XLVII மற்றும்XLVIIIஆம் அத்தியாயங்கள் |

குறிப்பு.

- எனது இல: PSC/APP/4/99/2018 மற்றும் 2019/01/29திகதிய கடிதம் மூலம் 2007/07/01 ஆம் திகதியின் பின்னர் உதவி சிறைச்சாலைஅத்தியட்சகர்கள் பதவிக்கு நியமனம்செய்யப்பட்ட அலுவலர்கள், அவர்கள் சித்தியடையவேண்டிய முதலாவது வினைத்திறன் காண் பரீட்சைக்குரிய பரீட்சயமற்றமொழி/ இரண்டாம்மொழி (தமிழ் மொழி)பாடத்தில் சித்தியடையவேண்டியதேவைப்பாட்டிலிருந்து விடுவிப்பதற்கு அரசாங்கசேவை ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- வெளிப்புற ஆட்சேர்ப்பின் கீழ் உதவிச் சிறைச்சாலைஅத்தியட்சகர்கள் பதவிக்கு நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படுபவர்கள் வினைத்திறன் காண் பரீட்சைக்குரிய அனைத்துப் பாடங்களுக்கும் தோற்றி அதில்சித்தியடைதல் வேண்டும். இருப்பினும், சட்டம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருப்பின், சட்டம் I பாடத்திலிருந்து விடுவிப்புச் செய்யப்படும்.
- உள்ளகப் பதவி உயர்வுகள் மூலம் உதவி அத்தியட்சகர்கள் பதவிக்கு பதவி உயர்வு பெற்ற அலுவலர்கள், பதவிக்குரியவினைத்திறன் காண் பரீட்சைக்குரிய சட்டம் II மற்றும் பரீட்சயமற்ற மொழி/இண்டாம் மொழிஆகிய இரண்டு பாடங்களிலிருந்து விடுவிப்புச்செய்யப்படுவார்கள். சட்டம் I மற்றும் நிர்வாகம் மற்றும் கணக்குகள் ஆகிய பாடங்களுக்குத் தோற்றுதல் வேண்டும்.
- எனினும், அவர்கள் சட்டப் பட்டமொன்றைப் பெற்றிருப்பின், சட்டம்I பாடத்திலிருந்து விடுவிப்புப் செய்யப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தின் போது, கணக்குகள் மற்றும் நிர்வாகம் ஆகிய பாடங்களுக்கு மாத்திரம் தோற்றுதல் வேண்டும்.

03. பரீட்சை மொழி ஊடகம் : பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு விருப்பமான ஒரு மொழியில் மாத்திரம்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பதாரியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்குத்தோற்றும்மொழியை மாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேறுகள் அட்டவணை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்களிடம் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் வழங்கமாட்டாது.

பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.

04.நிகழ்நிலை(Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கிலமொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி மற்றும் பதிவு அஞ்ஞலில் அனுப்பப்பட்ட அச்சுப்பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அந்த மென்பிரதி மற்றும் அச்சுப்பிரதி மெய்யுறுதிப்படுத்தல் (Verify) செய்யப்படுமென்பதோடுசெல்லுபடியான விண்ணப்பமொன்றாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுமுறைமையினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம்அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்குஅறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத்தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப்பூரணப்படுத்தும் போது அந்த அறிவுறுத்தல்களைஅவதானமாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுக்கொண்ட பின்னர்அதில் செய்யப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்ப படிவங்கள் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

05. விண்ணப்ப படிவங்கள்2026.04.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குக்கிடைக்க கூடியவாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்கள் ஊடாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இந்தத் தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படுகின்ற விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும்.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற கணிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அந்த தினத்திற்கு முன்னர், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன்சரியாகப்பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் பரீட்சை அனுமதி அட்டைகள்நிகழ்நிலையில் மாத்திரம் விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றி இணைய (வெப்) அறிவித்தல் மூலம் /விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத்

திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் அது குறித்து விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கை கடிதத்தை இணைய (வெப்) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை, பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது கிடைத்த பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை/ பரீட்சைக் கட்டணம் செலுத்துவது ஏற்புடையதெனில் அதற்குரிய பற்றுச் சீட்டின் நிழற்பிரதியை மற்றும் விண்ணப்ப படிவத்தை அஞ்ஞல் மூலம் அனுப்பும் போது பதிவு செய்த பற்றுச் சீட்டை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையைப்பரீட்சித்துப் பார்த்து ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவத்திற்கமைய குறித்த திருத்தங்களைச் செய்து கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களுக்காகச் செய்யப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

07.

I. பரீட்கைக்கான அனுமதி அட்டையில்விண்ணப்பதாரரியின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணபதாரியொருவர் தனக்குரிய பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்குத்தோற்றுதல்வேண்டும்.

II. கீழே 08 ஆம்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குத் தவறுகின்ற விண்ணப்பதாரர்களின் (பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற) முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படாமாட்டாது.

III. பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

IV. பரீட்சை விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

08. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் அவர்கள் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சைமேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் அவர்களின் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்கான பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

அதேபோன்று பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடியவாறு முகம் மறைக்கப்படாதவாறுமற்றும் இலத்திரனியல்தொடர்பாடல் உபகரணங்களை அணியவில்லை என்பதைஉறுதி செய்துகொள்ளக்கூடியவாறு இரண்டு காதுகள் மறைக்கப்படாதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதற்கு இணங்காத எவரொருவரும் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரையில் முகம் மற்றும் இரண்டு காதுகள் மறைக்கப்படாதவாறு இருத்தல் வேண்டும்.

09. பரீட்சைக் கட்டணம் ஒரு பாடத்திற்கு ரூபா. 250/=. ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை முறையில் வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டண முறைகளின் கீழ் மாத்திரம் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும்கடன் அட்டைகள் மூலம் (Any Bank Credit Card)
ii. இணையம் மூலம் கொடுப்பனவுசெய்ய முடியுமான எந்தவொரு வங்கி வரவுஅட்டை மூலம் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)
iv. எந்தவோர் இலங்கை வங்கி கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:-

(அ) மேற்குறித்த முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் முறை தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம்அல்லது மின்னஞ்சல்செய்தி மூலம் அறிவிக்கப்பப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத்தொகையும் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த

கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது ஏற்படுகின்றதவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட தொகை எந்தவொருகாரணத்திற்காகவும் மீளக்கொடுப்பனவு செய்யப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

(ஈ) பரீட்சைக்குமுழுமையாகஅல்லது அதன் ஒரு பகுதிக்குமுதல் முறையாக விண்ணப்பிக்கும்போது கட்டணம் அறவிடப்படமாட்டாது.

10. பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்கள் விதித்துள்ள சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த விதிகளை மீறும் பட்சத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்படுவதற்கு நேரிடுமென அறியத்தருகின்றேன்.

11. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படுகின்ற அறிவித்தல்களுக்கு இடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடுகள்காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தல் மேலோங்கியிருக்கும் / செயல்வலுக் கொண்டதாக இருக்கும்.

12. இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனுமொரு விடயம் காணப்படுமாயின் அது தொடர்பாக முடிவு செய்யும் அதிகாரம் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு.

**எச்.எம்.என்.சீ. தனசிங்க**
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (ப.க)
2026.01
சிறைச்சாலைகள் தலைமையகம்.